**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 28/2021

நாள் : 28.02.2024

பி.வா.சா.1 திருமதி. உமாமகேஸ்வரி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் **வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது கணவரின் தந்தையின் தந்தை பெயர் ராக்கப்பன் சேர்வை ஆகும். ராக்கப்பன் சேர்வையின் மனைவி பெயர் பார்வதியம்மாள் ஆகும். அவர்களின் இருவருக்கும் முனி என்ற ரமணி என்பவர் வாரிசு என்றால் சரிதான். ரமணி என்பவருக்கு ரகுநாதன், ரவிந்திரநாதன், ராமமூர்த்தி மற்றும் நாகேஸ்வரி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். ரவிந்திரநாதனின் மனைவிதான் இந்த வழக்கின் 2வது வாதி பானுமதி என்றால் சரிதான். 3, 4 வாதிகள் இரண்டாவது வாதியின் மகள்கள் என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகள் என்னுடைய குழந்தைகள் என்றால் சரிதான். ஆதியில் தாவா சொத்தானது ராக்கப்பன் சேர்வைக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். ராக்கப்பன் சேர்வை இறந்தபின்னிட்டு அந்த சொத்தை அவருடைய மனைவி பார்வதியம்மாள், முனி என்ற ரமணி ஆகியோர் அனுபவித்துவந்தார்கள் என்றால் சரிதான். பார்வதியம்மாள் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை தனது மகனான முனி என்ற ரமணி என்பவருக்கு 13.07.1970ல் விடுதலை பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள பதில் உரையில் தாவாச்சொத்துக்கள் ஆனது முனி என்ற ரமணிக்கு பாத்தியப்பட்ட தகப்பனார் வழி சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சாட்சி பிரமாணப் பத்திரத்தில் தாவா சொத்தானது காலஞ்சென்ற எனது மாமனார் முனி என்ற ரமணிக்கு பாத்தியப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது மாமனார் முனி என்ற ரமணிக்கு தகப்பனார் மூலமாக பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்ட விவரம்தான் சரி. முனி என்ற ரமணி அரசு

பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற நபர் என்று சொன்னால் சரிதான். அவரின் வருமானத்தில் தாவா சொத்தின் தரைத்தளத்தில் வீடுகட்டினாரா என்றால் ஆமாம்.

முனி என்ற ரமணி எப்பொழுது இறந்தார் என்றால் 23.06.2011ல் இறந்தார். அவர் இறக்கும் பொழுது அவர் வயது என்ன என்றால் 90 வயதிற்கு மேல் இருக்கும். அவர் இறந்தபின்னிட்டு சொத்துக்களை கூட்டுக்குடும்பாக ராமமூர்த்தி, ரகுநாதன், ரவிந்திரநாதன், நாகேஸ்வரி ஆகியோர்கள் கூட்டாக அனுபவித்து வந்தார்களா என்றால் சரியல்ல. இந்த சொத்துக்களுக்கு பட்டாவனது ரமணி பெயரில் உள்ளது சரிதான். வரியும் ரமணி பெயரில்தான் செலுத்தப்பட்டு வருகிறது என்றால் சரிதான்.

தரைத்தளத்தில் உள்ள வீட்டில் நான் குடியிருந்து வருகிறேன். தரைத்தளத்தில் உள்ள வீட்டில் ராதிகா தையலகம் என்ற பெயரில் நான் தையல் கடை வைத்து குடியிருந்து வருகிறேன். ஆரம்ப காலக்கட்டத்தில் மாடியில் வாதிகள் வசித்து வந்தார்களா என்றால் ஆமாம். மாடியில் வாதிகள் குடியிருந்த பொழுது அவர்களுக்குண்டான தண்ணீரை தரைத்தளத்திலிருந்து தான் எடுத்து சென்றார்கள் என்றால் ஆமாம்.

வாதிகள் தண்ணீரை தரைத்தளத்திலிருந்து எடுப்பதை நான் அப்போதிலிருந்து தடுத்து தொந்தரவு கொடுத்திருந்தேன் என்றால் சரியல்ல. தையலகத்தை தரைதளத்தில் நான் 1996ம் ஆண்டு முதல் நடத்திவருகிறேன். அதன் மூலம் வரும் வருமானத்தை நான் யாருக்கும் பிரித்துக்கொடுத்தேனா என்றால் இல்லை. 1ம் வாதியும், 2வது வாதியின் கணவர் ரவிந்திரநாதனும் அரசு ஊழியர்கள் என்றால் சரிதான். அவர்களுடைய சுய வருமானத்தின் மூலமாக மேல்தளத்தில் அவர்கள் இருவரும் தனித்தனியாக 10 லட்சத்திற்கு ஹலோ பிளாக் வைத்து வீடு கட்டி குடியிருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எனது மாமியார்தான் கட்டிக்கொடுத்தார். 1ம் வாதி மற்றும் 2ம் வாதியின் கணவரும் மேல்தளத்தில் குடியிருந்த பொழுது அவர்கள் நான் வசித்து வராமல்

அவர்களுக்கு பிரச்சனை கொடுத்து கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல.

மேற்படி மேல்தளத்தில் உள்ள வீட்டின் வீட்டின் சாவிகள் ஆனது 1வது வாதி மற்றும் 2ம் வாதியின் கணவர் வசம் இருக்கிறது என்றால் தவறு. ஆரம்பத்தில் இருந்தது, தற்பொழுது நாங்கள் பயன்படுத்தி வருகிறோம். எனது கணவர் 29.10.2018ம் தேதி இறந்துவிட்டார். 2வது வாதியின் கணவர் 03.01.2015ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது கணவர் இறந்த பின்னிட்டும் தரைத்தளத்தில் உள்ள வீட்டில் ராதிகா தையலகம் என்ற பெயரில் நான் தையல் கடை நடத்தி வருகிறேனா என்றால் சரிதான்.வாதிகளுக்கும் எங்களுக்கும் தாவா சொத்துக்களை பிரித்து கொள்வது சம்மந்தமாக எங்கள் உறவினர் மூலமாக ஏற்கனவே பேசப்பட்டதா என்றால் இல்லை.

எனது சின்ன மாமனார் மாரி என்பவர் மூலமாகத்தான் பேச்சு வார்த்தை நடத்தினார் என்றும், நான் தான் அதை நிராகரித்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. ஆரம்பத்தில் தாவா சொத்துக்களுக்கு ரமணி மற்றும் அவர்களின் வாரிசுகள் பெயரில் கூட்டுபட்டா ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் பெயரில் நான் தனியாக பட்டா பெற்றுள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 ஆன ஆவணமான உயிலில் வலதுபுற மேல்புறத்தில் 102 என்று எழுதப்பட்டுள்ளது காரணம் என்ற என்றால் எனது மாமனார் ஒரு பைல் வைத்து பராமரித்து வந்தார், அந்த பைலின் அடிப்படையில் பக்க எண் போடப்பட்டுள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.1 க்கு சம்மந்தப்பட்ட பைலில் இருந்துதான் மேற்படி ஆவணத்தை நான் எடுத்துக்கொடுத்தேன். மேற்படி பைல் எனது வீட்டில் இருந்தால் அதை தாக்கல் செய்ய நான் தயாராக உள்ளேன். உயில் பற்றிய விவரம் எனக்கு எப்பொழுது தெரியவந்தது என்றால் எனது கணவர் இறந்த வருடம்தான் தெரியவந்தது. பி.வா.சா.ஆ.1 ஆனது பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் அந்த ஆவணம் எனக்குத் தெரியாது.

பி.சா.ஆ.1 ன் அடிப்படையில் 2018ற்குபிறகு நான் நீதிமன்றத்தில் மூலம் நான் நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் அந்த விவரம் பற்றி

எனக்குத் தெரியாது. பி.சா.ஆ.1 ஆனது இந்த வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.  பி.சா.ஆ.1 இல் காட்டப்பட்டுள்ள ரமணியில் கையெழுத்து அவருடைய கையெழுத்து இல்லை என்றால் அது பற்றி எனக்கு சொல்ல தெரியாது. பி.சா.ஆ.1 இல் காட்டப்பட்டுள்ள சாட்சிகளை விசாரித்தால் அந்த ஆவணத்தின் நன்பகத்தன்மை குறித்து தெரியவரும் என்று சொன்னால் சரிதான்.

பி.சா.ஆ.1 இல் உள்ள ரமணியின் கையெழுத்து அவருடையதுதான் என்பதை நிரூபிக்க நான் தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். பி.சா.ஆ.1 ஆனது யாருடைய பாதுகாப்பில் இருந்தது என்ற விவரத்தை குறித்து நான் தாக்கல் செய்த பதிலுரையிலோ, முதல் பிரமாணப்பத்திரிக்கையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளதா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அந்த ஆவணம் எங்களது பாதுகாப்பில் இருந்தது.  2018 ம் வருடத்திலேயே பி.சா.ஆ.1 ஆன உயிலானது எனக்கு தெரியவந்திருந்தால் உடனடியாக தாவா சொத்துக்குண்டான பட்டாவை என் பெயரில் மாற்ற நான் நடவடிக்கை எடுத்திருப்பேன் என்று சொன்னால் அந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள Handwritting ஆனது என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை என்பதால் நான் எவ்வித நடவடிக்கையும்எடுக்கவில்லை.

எனது கணவர் பி.சா.ஆ.1 ஐ குறித்து என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை, காரணம் அவர் 2-3 வருடங்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். எனது கணவருக்கும் பி.சா.ஆ.1 இருக்கும் விவரம் தெரியாது. தாவா சொத்தானது ரமணி என்பவருக்கு பூர்வீக சொத்து என்பதால் அந்த சொத்துககளை குறித்து ரமணிக்கு உயில் எழுதி வைக்க உரிமை கிடையாது என்றால் சரியல்ல. ரமணி என்பவர்சொந்தமாக வாங்கியதால் அவருக்கு உரிமை உள்ளது.

தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாக 08.02.2021ம் தேதி வாதிகள் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால்

அவ்வாறு ஒரு தபாலை நான் வாங்கவில்லை. எனது கணவர் இறந்த பின்பு வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. ஒரு தலைபட்ச உத்தரவு ரத்து செய்த பின்னிட்டு நான் மேல்தளத்தில் சென்று பிரச்சனை செய்ததால், என் மீது புகார் கொடுக்கப்பட்டது என்றும், அதில் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஆமாம். மேற்படி போலீசார்விசாரணையில் நான் இனிமேல் மேல்மாடிக்கு சென்று எவ்வித பிரச்சனையும் செய்ய மாட்டேன் என்றும், சாவியை வாதிகள் வசம் ஒப்படைக்கிறேன் என்று நான் எழுதிக்கொடுத்தேனா என்றால் வாதிகள் என்னிடம் பிரச்சனை செய்ததால் நானும் அங்கு புகார் கொடுத்தேன். நான் அந்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். ஒருதலைபட்ச உத்தரவை வாதிகள் பெற்ற பின்னிட்டு நான் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல.

உண்மையிலேயே ரமணி உயில் எழுதி வைத்திருந்தால் அதன் அடிப்படையில் நான் நீதிமன்றம் மூலம் பரிகாரம் கோர நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும், மேற்படி ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்பதால்தான் நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் பாரா எண். 4 ல் ரமணி இறந்தவுடன் உடனடியாக உயிலானது அமலுக்கு வந்துவிட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ரமணிக்கோ எனது கணவருக்கோ தனித்து பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் பாரா எண். 3 ல் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டுள்ளது தான். அந்த பாரா எண்.3 ல் சொல்லியுள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் பி.சா.ஆ.1 ஐ தவிர

வேறு எந்த ஆவணமும் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு சொல்லத் தெரியவில்லை. உண்மையிலேயே அந்தஉயிலானது இருந்திருந்தால், பேச்சு வார்த்தையின் போதும், பதிலுரையிலும் சொல்லியிருப்பேன் என்றும், மேற்படி ஆவணமானது வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்பதால்தான் நான் அப்போது அதைப்பற்றி கூறாமல் உள்ளேன் என்றால் சரியல்ல.

பி.சா.ஆ.1 ஆனது என்னால் இந்த வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி பி.சா.ஆ.1 இல் காட்டப்பட்டுளள ரமணியின் கையெழுத்தை கையெழுத்த நிபுணருக்கு அனுப்பி அந்த கையெழுத்தானது அவருடையதுதான் என்று அறிக்கை பெற்றால்தான் ஆவணத்தின் உண்மை தன்மை தெரியவரும் என்று சொன்னால் அது குறித்து எனக்கு சொல்லத் தெரியவில்லை.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .